# சுற்றாடல் அமைச்சு

# 2023 தேசிய கனிப்பொருள் கொள்கை தொடர்பாக பொதுமக்கள் கருத்துக்களை அறிதல்

1999இல் தயாரிக்கப்பட்ட தேசிய கனிப்பொருள் கொள்கை, உலகளாவிய ரீதியிலும் மற்றும் உள்நாட்டு ரீதியிலும் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளைக் கவனத்திற் கொண்டு தற்போதைய தேவைப்பாட்டிற்கு பொருத்தமான வகையில் தரவேற்றம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்போதைய தேவைப்பாடாகும். விசேடமாக தற்போதுள்ள தேசிய கனிப்பொருள் கொள்கையில் உள்ளடக்கப்படாத ''கனிபொருள்களுக்கு பெறுமதி சேர்த்தல், புதிய தொழில்நுட்ப முறையை பயன்படுத்துவதன் மூலம் கனிப்பொருள் வளத்தின் முக்கியமான பயன்பாடு மற்றும் அந்த வளத்தை நிலையாக முகாமைத்துவம் செய்தல், தற்போதைய பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு பொருத்தமான வகையில் கனிய வளத்திற்கான முக்கிய இடத்தை வழங்குதல் போன்ற விடயத்துறைகளுக்கு இங்கு கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். இந்த நோக்கத்தை சாதிப்பதற்காக சுற்றாடல் அமைச்சு மற்றும் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தோடு இணைந்து அனைத்துத் தரப்பு நிறுவனங்களின் பங்களிப்புடன் 1999ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தேசிய கனிப்பொருள் கொள்கையை தரவேற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இங்கு தயாரிக்கப்பட்டுள்ள தேசிய கனிப்பொருள் கொள்கை வரைவின் பொருட்டு பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வரைவு செய்யப்பட்ட தேசிய கனிப்பொருள் கொள்கை பொதுமக்களின் கருத்துக்காக சுற்றாடல் அமைச்சின் www.env.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தின் ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஆர்வம் காட்டுபவர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதுடன் உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை 2023-05-29ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரியின் ஊடாக அல்லது மின்னஞ்சலின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு சுற்றாடல் அமைச்சு எதிர்பார்க்கின்றது.

**அஞ்சல் முகவரி:**
**பணிப்பாளர்,**
**இயற்கை வள முகாமைத்துவப் பிரிவு,**
**சுற்றாடல் அமைச்சு,**
**''சொபாதம் பியச'',**
**இல. 416/C/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

**மின்னஞ்சல் முகவரி:** dirlr@env.gov.lk / landresourcesl@gmail.com
**தொலைநகல்:** 011 2879975

**வைத்தியர் அனில் ஜாசிங்க,**
**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு.**

2023-04-26